செ.வெ.எண். 58/2008 நாள் 25/08/2008

விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை தந்தவர் முதல்வர் கலைஞர்
மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் பேச்சு

----------------

திருவண்ணாமலை மாவட்டம் செய்யார் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் சார்பில் கைக்கணினி, கணினி பயன்பாட்டுக் கருத்தரங்கு மற்றும் கருத்துக்காட்சி தொடக்க விழா செய்யார் அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

விழாவிற்கு மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் தலைமை வகித்து பேசினார்.

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் கைக்கணினி, கணினி பயன்பாட்டுக் கருத்தரங்கு மற்றும் கருத்துக் காட்சியை தொடங்கி வைத்து பேசினார்.

<u>விழாவிற்கு மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் தலைமை வகித்து பேசியதாவது.</u>

தமிழகத்தில் முதன்முறையாக செய்யார் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கைக்கணினி வழங்கி அறிமுகம் செய்து வைக்கப்பட்டதற்கு மகிழ்ச்சி அடைகிறேன். இந்த கைக்கணினியில் கரும்பு நடவு செய்தல் விபரம் பதிவு செய்தல் எந்த சூழ்நிலையிலும் மாற்றம் செய்ய இயலாது. கரும்பு சம்மந்தப்பட்ட அனைத்து தகவல்களும் தெரிந்து கொள்ளலாம். தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 40 துறைகளில் வேளாண்மை துறைக்குதான் முக்கியத்துவம் கொடுத்து வருகிறார். விவசாயத்திற்காக பல்வேறு திட்டங்கள் விவசாயக் கடன் தள்ளுபடி, இலவச மின்சாரம், நிலமற்ற ஏழை விவசாய குடும்பங்களுக்கு நிலம் வழங்கும் திட்டம் போன்ற திட்டப்பணிகளினால் விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.

விவசாயிகளை கேட்டுக்கொள்கிறேன். நிலத்தில் நெல், கரும்பு பயிரிட்டது போக மீதமுள்ள எஞ்சிய நிலத்தில் நெல்லி மற்றும் மூலிகை செடிகளை பயிரிட்டால் அதிக லாபம் பெறலாம். நெல்லிக்காய் பயிரிட்டால் நெல்லி ஊறுகாய் தயாரிக்கலாம். நெல்லி ஜூஸ் தயாரிக்கலாம். நாமக்கல் மாவட்டத்தில் நெல்லிக்காய் ஜூஸ் அறிமுக படுத்தப்பட்டுள்ளது. இது அனைத்து கடைகளிலும் கிடைக்கும் அதை வாங்கி சாப்பிட்டால் உடல் நலத்திற்கு நல்லது. கண்பார்வை நன்றாக இருக்கும்.

மேலும் இன்றைய சூழ்நிலையில் டீசல் தட்டுப்பாடு உள்ளது. இந்த டீசல் தட்டுப்பாட்டை போக்க காட்டாமணக்கு பயிர் செய்யலாம். நீரில்லாத பகுதிகளில் காட்டாமணக்கு பயிரிட வேண்டும். காட்டாமணக்கு டீசல் தயாரிக்க பயன்படுகிறது. அமெரிக்கா போன்ற நாடுகளில் காட்டாமணக்கு விதைகள் 40 லிருந்து 150 டாலர் வரை விற்கிறார்கள். இந்தியாவில் 2 கோடி ஏக்கர் நிலத்தில் காட்டாமணக்கு பயிரிட்டால் டீசல் எடுக்கலம். குருடு ஆயில் பெறலாம். அதேபோன்று 1 ஏக்கருக்கு மூலிகை செடிகளை பயிரிட்டால் ஏக்கருக்கு ரூ. 1 லட்சம் வரை வருமானம் கிடைக்கும். எனவே இதுபோன்ற பயிர்களை பயிர் செய்து பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் வேலையில்லாத திண்டாட்டத்தை போக்க முதல்வர் கலைஞர் அவர்கள் 30 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்க நடவடிக்கைகளை எடுத்து உள்ளார். வேளாண்மைத் துறையில் தமிழகத்தில் 2006ல் 60 லட்சம் டன் உணவுப்பொருள் உற்பத்தி இருந்து 2008ல் 100 டன்னாக உணவுப்பொருள் உற்பத்தி பெருகி உள்ளது. 40 லட்சம் டன் உற்பத்தி அதிகரித்துள்ளது. அதற்காக வேளாண்மை துறை அமைச்சரையும், துறை சார்ந்த அலுவலர்களையும் பாராட்டுகிறேன். இவ்வாறு மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் பேசினார்.

(து.பி.பா.)

**<u>மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் அவர்கள் கைக்கணினி மற்றும் கணினி பயன்பாட்டுக் கருத்தரங்கு கருத்துக்காட்சி தொடங்கி வைத்து வலையதளத்தை துவக்கி வைத்து பேசுகையில்</u>**

வளர்ந்து வரும் தொழில் நுட்பத்திற்கு ஏற்ப கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் செயல்பாடுகளை கணினி மயமாக்க முதல்வர் கலைஞர் தலைமையிலான அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. விவசாயிகளின் கரும்பை பதிவு செய்யவும் வெட்டு உத்தரவு வழங்க ஒரு இணைய தளத்தை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் செயல்பாடுகள் அனைத்தும் கணினி மூலமாக செயல்படுகிறது. கைக்கணினியில் கரும்பு விவசாயின் பெயர், அங்கத்தினர் எண், கிராமத்தின் பெயர் பதிவு செய்துள்ள பரப்பு, பதிவு செய்த மாதம், பயிரிடப்பட்ட ரகம் போன்ற அனைத்து விவரங்களும் கைக்கணினியில் பதிவு செய்யப்படுகிறது.

2007-08ல் அறவை பருவத்திற்கு 9 சதவிதம் கட்டுமானம் உள்ள கரும்பு மத்திய அரசு டன் ஒன்றுக்கு ரூ. 811.80 காசு என அறிவித்தது. மாநில அரசு மத்திய அரசு அறிவித்த விலையுடன் ரூ. 222.20 விலை கூடுதலாக வழங்கி ஒரு டன் கரும்புக்குக ரூ. 1034 என வழங்கி வருகிறது. தமிழகத்தில் 9 சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. புதியதாக தொடங்கப்படும் சர்க்கரை ஆலைகளுக்கு அரசு சில விதிமுறைகளை அறிவித்துள்ளது. 100 சதவிகித வண்டி வாடகையை ஆலைகளே ஏற்க வேண்டும். அரசு அறிவித்த பரிந்துரை விலையை வழங்க வேண்டும். சொட்டு நீர் பாசனம் போன்ற புதிய தொழில்நுட்ப முறையை கடைபிடிக்க வேண்டும். இணை மின் உற்பத்தி எத்தனால் வடிப்பகங்கள் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்ற வழிகாட்டு நெறிமுறைகள் தமிழக அரசு அறிவித்துள்ளது.

2008ல் நெல் கொள்முதல் விலை சாதாரண ரகத்திற்கு மத்திய அரசு குவிண்டாலுக்கு ரூ. 850/- என அறிவித்து தமிழக அரசு கூடுதலான ரூ. 150 ஊக்கத்தொகையை வழங்கி ரூ. 1000/- என அறிவித்துள்ளது. மத்திய அரசு சன்ன ரகத்திற்கு ஒரு குவிண்டாலுக்கு ரூ. 880/- என அறிவித்தது. தமிழக அரசு கூடுதலாக ரூ. 170 வழங்கி ரூ. 1050/- என அறிவித்துள்ளது.

கரும்பு விவசாயிகள் சொட்டு நீர் பாசன முறையை பயன்படுத்த வேண்டும் லாபத்தை பெற 50 சதவிகிதம் மான்யம் வழங்கப்படுகிறது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலமாக ரூ. 925 கோடி செலவில் இணை மின் உற்பத்தி நிலையங்கள் அமைத்து அதன் மூலம் 188 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளார். 25 லட்சம் விவசாயிகள் பெற்ற விவசாயக் கடன் ரூ. 7 ஆயிரம் கோடி தள்ளுபடி செய்தது மட்டுமல்லாது 2006-07 ஆம் ஆண்டுக்கு பயிர்க்கடன் ரூ. 1250 கோடியும் 2007-08ஆம் ஆண்டிற்கு பயிர்க்கடன் ரூ. 1177 கோடியும் 2008-09ஆம் ஆண்டிற்கு ரூ. 1500 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. பயிர்க்கடன் வட்டி விகிதம் 9 சதவிகிதத்திலிருந்து தற்போது 4 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மகாராஷ்டிரா, ஆந்திரா, கர்நாடகா, கேரளா போன்ற மாநிலங்களில் 6685 பேர் தற்போது செய்து கொண்டுள்ளனர். ஆனால் தமிழகத்தில் அப்படிபட்ட நிலை இல்லை. நெல் உற்பத்தி பெருக செம்மை நெல் சாகுபடி முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 1 ஹெக்டேருக்கு 13 டன் நெல் உற்பத்தி ஆகிறது. இதை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் விவசாயிகள் தோட்டக்கலைப் பயிர்களை பயிரிட வேண்டும்.

(த.பி.பா)

தேசிய தோட்டக்கலை இயக்ககம் மா. நெல்லி, வாழை, முந்திரி, கோகோ, மிளகாய் மலர்கள் சாகுபடி செய்ய பசுமை குடில் அமைக்கவும் உரங்கள் உயிரினம் தோட்டக்கலை விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. அதன்படி 2007-08ஆண்டில் ரூ. 75.76 கோடி மானியம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2008-09ஆம் ஆண்டிற்கு ரூ. 120 கோடி திட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் சாகுபடி வேளாண் மற்றும் அதன் சார்பு துறைகளுக்கு ரூ. 185.31 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் இந்த திட்டப்பணிகளை பயன்படுத்தி முழுமையாக பயனடைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இயந்திரத்தை கொண்டு நடவு செய்தல், அறுவடை செய்தல் போன்ற திட்டபணிக்கு அரசு இயந்திரமாக்கல் திட்டத்தின் மூலம் வேளாண் இயந்திரங்கள் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்க ரூ. 6 கோடி வழங்கியுள்ளதும் மேலும் இதை ஆண்டிற்குக ரூ. 25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே முதலமைச்சர் கலைஞர் 89ல் 1940 பம்வு செட்டுகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. 89ல் ரூ. 209 கோடி மின்சாரக் கடனாக தள்ளுபடி செய்யப்பட்டது. விவசாயக்கடன் ரூ. 7 ஆயிரம் கோடி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதுபோன்று முதலமைச்சர் கலைஞர் ஆட்சிக்கு வரும் போதெல்லாம் விவசாயிகளுக்கு பல்வேறு உதவிகளை செய்து வருகிறார். கலைஞர் ஆட்சி விவசாயிகளுக்கு பொற்கால ஆட்சி எனவே விவசாயிகள் கலைஞர் போடும் திட்டங்களை முறையாக பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் அவர்கள் பேசினார்.

<u>மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் முன்னிலையுரை ஆற்றுகையில்</u>

தலைவர் கலைஞர் அவர்கள் எப்பொழுதெல்லாம் ஆட்சிக்கு வருகிறாரோ அப்போதெல்லாம் திருவண்ணாமலை மாவட்டம் முழுக்க முழுக்க விவசாயத்தை நம்பியுள்ள மாவட்டமாகும். கரும்பு விவசாயிகள் டெபாசிட் மற்றும் வண்டி வாடகை அரசே ஏற்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். அதை முதலமைச்சர் கவனத்திற்கு கொண்டு செல்கிறேன். முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விவசாயிகளின் கஷ்டத்தை உணர்ந்து வெட்டுக் கூலி, வண்டி வாடகை தருகிறோம் என்று வண்டி வாடகை வழங்கப்பட்டு வருகிறது. வள்ளுவரை நாம் பார்த்தது கிடையாது ஆனால் வாழும் வள்ளுவராக முதல்வர் கலைஞர் அவர்கள் நமக்கு வழிகாட்டியாக திகழ்கிறார். விவசாயத்தில் புதிய தொழில் நுட்ப முறைகள் கொண்டு வரப்பட்டுள்ளது. சொட்டுநீர் பாசனம் மூலம் விவசாயிகளுக்கு நீர் மிச்சப்படுகிறது. திருவண்ணாமலை மாவட்டத்தில் நீர் பற்றாக்குறை எனவே விவசாயிகள் சொட்டு நீர் பாசனத்தை பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் ஆட்சியில் தான் விவசாயிகள் மகிழ்ச்சியாக உள்ளனர் என்று தெரிவித்துக்கொள்கிறேன். கலைஞர் ஆட்சியில் தான் இலவச மின்சாரம், விவசாயிகள் பெற்ற கூட்டுறவுக் கடன் ரூ. 7 ஆயிரம் கோடி தள்ளுபடி போன்ற பல்வேறு வகையில் விவசாயிகள் பலன் அடைந்துள்ளனர். கட்சி பாகுபாடியின்றி விவசாயக் கடனை தள்ளுபடி செய்தவர் முதல்வர் கலைஞர். எனவே முதல்வர் கலைஞர் அவர்களுக்கு என்றும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் பேசினார்.

(த.பி.பா)

இவ்விழாவில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் ஒரு சர்க்கரை ஆலைக்கு ஒருவர் வீதம் அதிக மகசூல் விளைவித்த கரும்பு விவசாயிகள் 37 நபர்களுக்கும் சிறப்பாக பணியாற்றிய களப்பணியாளர் ஆலைக்கு ஒருவர் வீதம 37 பணியாளர்களுக்கும் கைக்கணினி மென்பொருள் உருவாக்கிய பதினைந்து நபர்களுக்கும் பதக்கம் மற்றும் நற்சான்றிதழ்களும் செய்யாறு சர்க்கரை ஆலை கரும்பு அலுவலர் மற்றும் கரும்பு உதவியாளர் 60 நபர்களுக்கும் ஒரு சர்க்கரை ஆலைக்கு 4 பேர் வீதம் மற்ற ஆலைகளின் கரும்பு அலுவலர் மற்றும் கரும்பு உதவியாளர்களுக்கும் மொத்தம் 300 நபர்களுக்கு கைக்கணினி பயிற்சி சான்றிதழ்களும் வழங்கினார்.

சர்க்கரைத்துறை ஆணையர் திரு. அதுல்ய மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் திட்ட விளக்கவுரை ஆற்றினார்கள்.

வேளாண்மைத்துறை ஆணையர் திரு. எஸ். கோசலராமன் இ.ஆ.ப., சர்க்கரை கூடுதல் ஆணையர் திரு. கோ. இராமமூர்த்தி இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். மு. ராஜேந்திரன் இ.ஆ.ப., வந்தவாசி நாடாளுமன்ற உறுப்பினர் செஞ்சி நா. இராமச்சந்திரன், வந்தவாசி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி. ஜெயராமன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

ஆரணி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர். சிவானந்தம், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் திரு. மு.பெ. கிரி, மாவட்ட வேளாண் விற்பனைக்குழுத் தலைவர் திரு. இரா. த. சம்பத், ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர்கள் திரு. கே. ஆர். சீதாபதி, தரணி வேந்தன், சுகன்யாபாரி, மோ.ரவி, லட்சுமிசங்கர் செய்யாறு நகரமன்றத்தலைவர் திரு. என். சம்பத், ஒன்றியக்குழு துணைத்தலைவரகள் ஆர். வேல்முருகன், ஏ. ஜோதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியை செய்தி மக்ள தொடர்பு அலுவலர் திரு. மு. விஜயக்குமார் தொகுத்து வழங்கினார்.

முன்னதாக செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆட்சியர் திருமதி. இரா. வனிதா வரவேற்றுப் பேசினார்.

முடிவில் தலைமை கரும்பு அபிவிருத்தி அலுவலர் முனைவர் ஆ. சேகர் நன்றி கூறினார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருவண்ணாமலை.